மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 48/2020

பெயர் : லட்சுமி
சாட்சி – வா.சா–2 நாள்: 24.02.2026

---

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பு)**

1. எனது கணவர் பெயர் சின்னையன் ஆகும். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் கடந்த 20 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். க.ச.847 காலை சம்மந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.847 காலை தடம் யாருக்கு சொந்தமானது என்றால் அது பொது தடம் ஆகும். மேற்படி க.ச.847 பொது தடம் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது எந்த ஆவணம் என்றால் எனக்கு தற்போது நினைவில் இல்லை.

2. க.ச.847 தடத்தின் அகலம் 42அடி என்று எங்களது இடைமனு எண்.178/2020 பிராமண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். பொது பாதை ஆக்கிரமிப்பு சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோமா என்றால் நாங்கள் கொடுக்கவில்லை 1ம் பிரதிவாதி அரவிந்தராஜ் தான் கொடுத்துள்ளார். பாதை ஆக்கிரமிப்பு சம்மந்தமாக தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றால் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்கிறார் என்பதால் தடுப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

3. எனது கணவர் 21.06.2012 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்துள்ளதாக வா.சா.1 சாட்சியத்தின் மூலம் வா.சா.ஆ.3 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும் மேற்படி தடம் தான் பாதை என்றால் சரிதான். க.ச.845/3 காலை சொத்தினை எனது கணவர் வா.சா.ஆ.5 14.06.2012 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் சரிதா விஜயகுமார் மற்றும் கஸ்தூரி அருண் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.5 ஆவணத்தல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும் மேற்படி தடம் தான் பாதை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும், நான் வசிப்பதாக சொல்லும் முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும், உள்ளே செல்வது தான் பிரச்சனையாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 அவணத்தில் மேற்படி தடத்தினை தென்வடல் இட்டேரி என்று தான் குறிப்பிட்டு எனது கணவர் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது பெரிய வழித்தடம் ஆகும்.

5. வா.சா.ஆ.5 ஆவணத்தில் தடத்தின் அகலம் எவ்வளவு என்று குறிப்பிடாத போது மேற்படி தடம் 42 அடி என்று எப்போது எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு தெரியவந்தது என்றால் எனது கணவரிடம் கிரையம் பெற்ற சரிதா விஜயகுமார் என்பவர் கஸ்தூரி அருண் என்பவருக்கு பொது அதிகாரம் எழுதி கொடுத்து அவர்கள் மேற்படி சொத்தில் மனையிடம் ஏற்படுத்துவதற்காக DTCP அனுமதிக்காக அணுகிய போது தான் அளவீடு செய்தசமயம் 42 அடி என்று தெரியவந்தது. மேற்படி DTCP அனுமதி உத்தரவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 4 மற்றும் 5 வாதிகளிடம் DTCP அனுமதி உள்ளதா என்றால் இருக்கலாம். நான் வாதிகள் தரப்பில் மேற்படி அனுமதி உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இருந்தால் தாக்கல் செய்யமுடியும்.

6. எனது கணவர் வா.சா.ஆ.5 ஆவணம் எழுதி கொடுத்த போது க.ச.847 காலை தடத்தில் தார் சாலை எதுவும் போடப்படவில்லை என்றால் சரிதான். எனது கணவர் கிரைம் செய்து கொடுத்து எத்தனை ஆண்டுகள் கழித்து தார் சாலை போடப்பட்டது என்றால் எனக்கு நினைவில் இல்லை. மேற்படி தார் சாலையை யார் அமைத்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனது வழக்குரையில் ஊராட்சி தார் சாலை அமைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் தற்போது இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் ஊராட்சி தான் தார் சாலை போட்டுள்ளார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தார் சாலை இருந்ததா என்றால் இருந்தது. அதனை யார் அமைத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

7. தாவா பி மற்றும் சி அட்டவணை சொத்தின் இடையில் உள்ள எல்லையை பொறுத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பிரட்சனை செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி அட்டவணை சொத்து என்பது தடம் ஆகும். தாவா பி அட்டவணை சொத்து அரசாங்கத்திற்கு சொந்தமானது என்பதால் அவர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருக்கவேண்டும் என்றும் அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

8. க.ச.847 தடத்தின் இருபுற எல்லையும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். தடத்தின் அகலம் 42 அடி ஆகும். ஆனால் DTCP அனுமதியில் 32 அடி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. கிழபுறம் 5 அடியும், மேல்புறம் 5 அடியும் கழிவு நீர் செல்வதற்காக விடப்பட்டுள்ளது. க.ச.847 தடத்தினை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 4 மற்றும் 5 வாதிகள் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் ஆக்கிரமிப்பு செய்தார். 4 மற்றும் 5 வாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 4 மற்றும் 5 வாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சாமளாபுரம் பேரூராட்சி 5 முறை அறிவிப்பு அனுப்பியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. வருவாய் துறை அதிகாரிகள் சொத்தினை அளக்க வந்தால் பிரதிவாதிகள் பணி செய்யவிடாமல் தடுத்து எல்லை நிர்ணயம் செய்யவிடாமல் செய்வதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அப்போது யார் யார் அங்கு இருந்தார்கள் என்று எனக்கு நினைவில் இல்லை. நில அளவை செய்வதற்கு நாங்கள் எதுவும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இனிமேல் தான் எடுக்க உள்ளோம். க.ச.845/3 காலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மனைப்பிரிவு சம்மந்தமாக கஸ்தூரி அருண் ஒரு சாலையை தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் தடமானது 32 அடி தான் என்று குறிப்பிட்டு எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. 1 முதல் 3 வாதிகள், 4ம் பிரதிவாதி தங்கராஜ் மற்றும் கஸ்தூரி அருண் ஆகியோர் 2013ம் ஆண்டில் மேற்படி தார் சாலையை வழக்கு தாக்கல் செய்வதற்கு

முன்பாக அமைத்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. நாங்கள் தான் 15 பேருடன் வருவாய் துறையில் எல்லைக்கல் அமைக்க முயன்ற போது ஆட்சேபனை தெரிவித்தோம் என்றால் நடுரோட்டில் கல் வைக்க நாங்கள் ஆட்சேபனை தெரிவித்தோம். அந்த 15 நபர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 15 நபர்களுக்கும் உள்ளூர் திட்டக்குழும அனுமதியின் படியும், அவர்களது கிரைய ஆவணத்தின் படியும் தடத்தின் அகலம் 42 அடி அல்ல 32 அடி என்பதால் தான் அவரகள் தரப்பினர்களாக சேரவில்லை என்றால் சரியல்ல.

11. நாங்கள் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை 1ம் பிரதிவாதி வட்டாட்சியரிடம் மனுவாக ஏற்கனவே அளித்துள்ளார் என்றும், அது சம்மந்தமான விசாரணைக்கு நாங்கள் தான் ஒத்துழைக்க வில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வேண்டும் என்றே இந்த வழக்கிற்காக பிரதிவாதிகளுக்கு எதிராக பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மாவட்ட நில அளவையர் நட்டிருந்த எல்லை கற்களை நாங்கள் தான் அகற்றி விட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் 2012ம் ஆண்டு வரை குடியிருப்பதாக சொல்லும் வீட்டில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் குடியிருந்து வரும் க.ச.861 காலையில் ஆக்கிரமிப்பு செய்து வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.24 18:32:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.